**ஜனவரி – 02**

# TNPSC துளிகள்

- ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் 'குறள் வாரம்' (திருக்குறள் வாரம்) ஆகக் கொண்டாடப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- வனவிலங்கு வளங்காப்பிற்கு என மகத்தானப் பங்களிப்பினை ஆற்றிய ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்திற்கு, ஒரு புகழ்பெற்ற வனவிலங்கு உயிரியலாளரான மறைந்த AJT ஜான்சிங்கின் பெயரில் ஒரு விருது வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.
- இஸ்ரோ தனது 100வது ஏவுகலத்தின் ஏவுதலை, 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் திட்டமிடப்பட்டுள்ளதையடுத்து குறிப்பிடத்தக்க சாதனையைப் படைக்க உள்ளது.
- மகாராஷ்டிராவானது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட SSI மந்திர மந்த்ரா அறுவை சிகிச்சை எந்திர மனிதன் எனப்படுகின்ற தனது முதல் அறுவை சிகிச்சை எந்திர மனிதனைப் புனேவின் நோபல் மருத்துவமனைகள் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் அறிமுகப் படுத்தியுள்ளது.
- தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்ற கிங் கோப்பை சர்வதேச பேட்மிண்டன் ஓபன் போட்டியில் இந்தியாவின் பேட்மிண்டன் வீராங்கனையான லக்சயா சென் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## தங்கம் உடைமையில் தமிழகம் முதலிடம்




- உலகத் தங்கச் சபையின் சமீபத்திய அறிக்கையானது தமிழ்நாட்டின் தங்கம் உரிமை பற்றிய தரவுகளை வெளிப்படுத்தியுள்ளது.
- 6,720 டன்களுடன், உலகிலேயே அதிக அளவு தங்கத்தைத் தமிழக மாநிலம் கொண்டு உள்ளது.

- இந்தியாவின் மொத்தமான தங்கக் கையிருப்பில் இந்த மாநிலத்தின் அதிகப்படியான கையிருப்பு 28% ஆகும்.
- மேலும், அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு, ரஷ்யா போன்ற பல முன்னணி நாடுகளில் பெண்கள் வைத்துள்ள தங்கக் கையிருப்புகளை இது மிஞ்சுகிறது.
- இந்தியப் பெண்களிடம் மொத்தம் 24,000 டன்கள் தங்கம் உள்ள நிலையில் அதில் 40% தென்னிந்தியப் பெண்களிடம் உள்ளது.
- இந்திய வருமான வரிச் சட்டங்களின்படி, திருமணமான பெண்கள் 500 கிராம் வரை தங்கம் வைத்திருக்கலாம் மேலும் திருமணமாகாத பெண்கள் 250 கிராம் வரையிலும், ஆண்கள் 100 கிராம் வரையிலும் வைத்திருக்கலாம்.
- அமெரிக்கா 8,000 டன், ஜெர்மனி 3,300 டன், இத்தாலி 2,450 டன், பிரான்சு 2,400 டன், ரஷ்யா 1,900 டன் என்ற அளவில் தங்கம் வைத்துள்ளன.

## இளையோர்களுக்கான வேலைவாய்ப்புக் கொள்கை வரைவு



The Tamil Nadu Employment Policy has flagged several pressing problems in the current labour market in the State. A look at some of the challenges in securing quality jobs for the State's labour force

- A mismatch between the proliferation of low-end jobs and the demand for quality jobs from those with higher educational attainment
- Despite a high gross enrolment in tertiary education, almost 50% of the youth do not pursue it. This figure touches 60% in the case of youth from the Scheduled Caste. Employment opporunities need to be generated for this segment as well
- There are barriers for first generation students in securing quality employment, particularly in high-end services
- Despite the rising

half of the women in the prime age group and three out of four women in the age group of 20-29 are not a part of the paid workforce

- Most non-farm jobs are being created in low-end services, given the declining employment elasticity in manufacturing and lower employment intensity in high-end services
- The exit of young workforce from agriculture, citing poor returns, and a decline in employment elasticity in agriculture
- Inter-district disparities in economic

**What are the State's advantages**

- Tamil Nadu has the best trained workforce. The average years of formal training of its workforce are higher than that of States such as Gujarat and Maharashtra
- The State has a strong manufacturing base, besides IT and healthcare services. Given the technological shifts

it is arguably best-positioned to diversify into more value-adding segments in the manufacturing and services sectors

- The large number of higher educational institutions, including technical educational institutions, and a relatively higher representation in the National Institutional Ranking Framework allow T.N. to generate skills that are in

- தமிழ்நாடு மாநில திட்ட ஆணையமானது (SPC) தமிழ்நாடு வேலைவாய்ப்புக் கொள்கை வரைவினை உருவாக்கியுள்ளது.
- இது தற்போதைய தொழிலாளர் சந்தையில் - படித்த இளையோர்களிடையே நிலவும் அதிக வேலைவாய்ப்பின்மை விகிதங்கள் முதல் திறன்கள் மற்றும் நோக்கங்களுக்கு இடையிலான பொருத்தமின்மை மற்றும் வேலை வாய்ப்புகள் வரையிலான பல முக்கியமானப் பிரச்சினைகளை எடுத்துக் காட்டியுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் 34.11 மில்லியனாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த தொழிலாளர் தேவை 2031-32 ஆம் ஆண்டில் 36.5 மில்லியனாக- 2.3 மில்லியன் நிகர அதிகரிப்புடன் இருக்கும்.
- முந்தைய பத்து ஆண்டுகளில் (2011-12 முதல் 2021-22 வரை) வேலைவாய்ப்பில் பதிவான நிகர அதிகரிப்பு 2.12 மில்லியனாக இருந்தது.
- 2021-22 ஆம் ஆண்டில் பணியில் உள்ள இளையோர்களின் விகிதம் (20-29 வயது உடையவர்கள்) 50 சதவீதத்திற்கும் கீழ் குறைந்துள்ளது – இது 2004-05 ஆம் ஆண்டில்

இருந்த அளவினை விட 15 சதவீதத்திற்கும் அதிகமான சரிவு என்று அறிக்கை எடுத்துக் காட்டியுள்ளது.

- இது தற்போது வெறும் சுமார் 5.9% ஆக உள்ள வேளாண் துறையில் பணிபுரியும் இளையோர்களின் விகிதாச்சாரத்தில் பதிவான கடுமையானச் சரிவின் காரணமாக ஏற்பட்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் இளம் பெண்களின் (20-29 வயது) வேலைவாய்ப்பின்மை விகிதம் 7.4% ஆக அதிகரித்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## 2023-24 ஆம் ஆண்டின் வெளிநாட்டினர் நாடு கடத்தல்




- 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை மொத்தம் 2,331 வெளிநாட்டவர்கள், வெளிநாட்டினர் பிராந்தியப் பதிவு அதிகாரிகளால் (FRROs) நாடு கடத்தப்பட்டுள்ளனர்.
- இவர்களில் சுமார் 1,470 பேர் நைஜீரியாவையும், 411 பேர் வங்காளதேசத்தையும், 78 பேர் உகாண்டாவையும் சேர்ந்தவர்கள்.
- அதே காலக் கட்டத்தில், பாகிஸ்தானில் இருந்து சிறுபான்மைச் சமூகத்தினருக்கு 1,112 நீண்ட கால நுழைவு இசைவுச் சீட்டுகளை (LTV) உள்துறை அமைச்சகம் வழங்கியுள்ளது.
- LTV ஆனது, சுமார் ஓராண்டு முதல் ஐந்து ஆண்டுகள் வரையிலான குடியுரிமைக்கான முன்னோடிகளாகும்.
- மத்திய மற்றும் மாநில அரசுகள் மூலம் மொத்தம் 1,699 குடியுரிமைச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.
- இந்தக் காலகட்டத்தில் சுமார் 98 லட்சம் வெளிநாட்டினர் இந்தியாவிற்கு வருகை தந்து உள்ளனர், அதில் அதிக எண்ணிக்கையிலானப் பார்வையாளர்கள் வங்காள தேசத்தில் இருந்து (21,08,734) வருகை தந்துள்ளனர்.
- அதைத் தொடர்ந்து அமெரிக்கா (17,37,549), ஐக்கியப் பேரரசு (9,86,954), ஆஸ்திரேலியா (4,72,913), கனடா (4,00,417), இலங்கை (2,85,664), மலேசியா (2,80,578) ), ஜெர்மனி (2,39,271),

நேபாளம் (2,02,197) மற்றும் சிங்கப்பூர் (2,00,708) ஆகியவை உள்ளன.

- மொத்த வெளிநாட்டினரின் வருகையில் 10 நாடுகள் 70.27% பங்கினைக் கொண்டு உள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## சூயஸ் கால்வாயின் புதிய தட விரிவாக்கத்தின் சோதனை ஓட்டம்




- சூயஸ் கால்வாயின் தெற்கு முனைக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 10 கிலோ மீட்டர் தொலைவிலான கால்வாயின் சோதனையினை எகிப்து வெற்றிகரமாக மேற் கொண்டுள்ளது.
- சமீபத்திய விரிவாக்கம் ஆனது கால்வாயின் இருவழிப் பகுதியின் மொத்த நீளத்தினை 72 கிலோ மீட்டரில் இருந்து முதல் 82 கிலோ மீட்டராக நீட்டித்துள்ளது, இதன் மூலம் இந்தக் கால்வாயின் மொத்த நீளம் 193 கிலோ மீட்டராக உள்ளது.
- சோதனை ஓட்டத்தின் போது இரண்டு கப்பல்கள் கால்வாயின் இருவழிப் பகுதியின் புதிய பகுதி வழியாக எந்த அசம்பாவிதமும் இல்லாமல் கடந்து சென்றன.
- இந்த விரிவாக்கம் ஆனது தினசரி கூடுதலாக 6 முதல் 8 கப்பல்கள் இயக்க இயலும் என்ற வகையில் கால்வாயின் போக்குவரத்துத் திறனை மேம்படுத்தி, சாத்தியமான அவசரநிலைகளில் போக்குவரத்தினை கையாளுவதற்கான அதன் திறனையும் நன்கு மேம்படுத்துகிறது.
- "பிராந்தியச் சவால்கள்" காரணமாக, 2024 ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாய் வருவாயில் சுமார் 7 பில்லியன் டாலர்களை எகிப்து அரசு இழந்தது, இது 2023 ஆம் ஆண்டில் பதிவான வருவாயில் இருந்து 60% சரிவு ஆகும்.

## சீனாவின் CR450 அதிவேக விரைவு இரயில்


- சீனா தனது அடுத்த தலைமுறை நுட்பத்திலான CR450 எனப்படும் அதிவேக இரயிலின் முன்மாதிரியை வெளியிட்டுள்ளது.
- இது ஒரு மணி நேரத்திற்கு 450 கிலோ மீட்டர் (281 மைல்) சோதனை வேகத்தையும், மணிக்கு 400 கி.மீ (248.5 மைல்) என்ற செயல்பாட்டு வேகத்தையும் எட்டியது.

- ❖ இந்தச் சேவை தொடங்கிய பின்பு, இது 2017 ஆம் ஆண்டில் அறிமுகமான சீனாவின் தற்போதைய CR400 மாதிரியினை விஞ்சி, உலகின் மிக அதிவேக விரைவு இரயிலாக மாறலாம்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## PSLV-C60 திட்டம்




- ❖ இந்தத் திட்டமானது பத்து இந்திய விண்வெளிப் புத்தொழில் நிறுவனங்களுக்கு தங்கள் கருவிகளை விண்வெளிக்கு அனுப்ப உதவியது.
- ❖ இது PSLV-C60/SPADEX திட்டத்தின் POEM-4 தொகுதியில், அரசு சாரா நிறுவனங்களின்

(NGEs) 10 கருவிகளை மிகவும் வெற்றிகரமாக நிறுவுவதற்கும் செயல்படுத்துவதற்கும் உதவியது.


❖ PSLV ஏவுகலத்தின் கடைசிக் கட்டமானது விண்வெளியில் சில மாதங்கள் நிலைத்து இயங்கும் வகையில் மீளுருவாக்கம் செய்யப்பட்டு PS4-சுற்றுப்பாதைச் சோதனை மாதிரி (POEM) என்று பெயரிடப்பட்டுள்ளது.

❖ PSLV POEM என்பது இஸ்ரோ நிறுவனத்தினால் நிலை நிறுத்தப் படுத்தப் பட்டுள்ள ஒரு நடைமுறை தீர்வாகும்.

❖ இந்தியப் புத்தொழில் நிறுவனங்கள், பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆனது தங்களது முழு செயற்கைக்கோள்களையும் ஏவாமல் தாங்கள் உருவாக்கும் விண்வெளித் தொழில்நுட்பங்களைப் பரிசோதிக்க அனுமதிக்கிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 2024 – பருவநிலை நெருக்கடிகள் மிக்க ஆண்டு - ஐ.நா. அறிக்கை




❖ 2024 ஆம் ஆண்டு ஆனது, மனித நடவடிக்கைகளால் தூண்டப்பட்ட ஒரு தசாப்தத்தில் எதிர்பாராத அளவில் வெப்ப அதிகரிப்பினைத் தூண்டி, இதுவரையில் பதிவான மிக வெப்பமானதாக ஆண்டாக அமைகிறது.

❖ பசுமை இல்ல வாயு அளவுகள் ஆனது இது வரை பதிவு செய்யப்படாத உச்சநிலையை நோக்கித் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

❖ பருவநிலை மாற்றம் ஆனது 2024 ஆம் ஆண்டில் அதிக வெப்பம் பதிவான 41 நாட்களை ஏற்படுத்தியது.

❖ பருவநிலை மாற்றம் ஆனது, குறைந்தது 3700 பேரின் உயிரைப் பலி வாங்கிய மற்றும் மில்லியன் கணக்கானவர்களை புலம் பெயரச் செய்த 29 வானிலை நிகழ்வுகளில் 26 நிகழ்வுகளை தீவிரமடையச் செய்தது.

❖ 2025 ஆம் ஆண்டு ஆனது சர்வதேசப் பனிப்பாறைகள் பாதுகாப்பு ஆண்டாக நியமிக்கப் பட்டுள்ளதோடு, இந்தக் கருத்தாக்கமானது யுனெஸ்கோ மற்றும் WMO ஆகியவை

மூலம் முன் வைக்கப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## 2023 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பகுதிகளில் பதிவான வன்முறைச் சம்பவங்கள்

- 2023 ஆம் ஆண்டில் வடகிழக்கு இந்தியாவில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 77% மணிப்பூர் மாநிலத்தில் பதிவாகியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் வடகிழக்கில் சுமார் 243 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன, அவற்றில் 187 சம்பவங்கள் மணிப்பூரில் நடந்தவை.
- 2023 ஆம் ஆண்டில் சுமார் 187 சம்பவங்கள் பதிவாகியுள்ளன, இதன் விளைவாக 35 பொது மக்கள் மற்றும் ஏழு பாதுகாப்புப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 2022 ஆம் ஆண்டில் அந்த மாநிலத்தில் 137 கிளர்ச்சி தொடர்பான சம்பவங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.




# இதரச் செய்திகள்

## சர்வதேச ஆண்டுகள் 2025




- ஐக்கிய நாடுகள் சபையானது 2025 ஆம் ஆண்டினைச் சர்வதேச குவாண்டம் (துளிம)

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆண்டாக (IYQ) அறிவித்துள்ளது.

- UNGA ஆனது 2025 ஆம் ஆண்டானது "Cooperatives Build a Better World" என்ற கருத்துருவின் கீழ் சர்வதேசக் கூட்டுறவு ஆண்டாக (IYC2025) கொண்டாடப்படும் என்று அறிவித்தது.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2025 ஆம் ஆண்டினை சர்வதேசப் பனிப்பாறைகள் பாதுகாப்பு ஆண்டாக அறிவித்துள்ளது.
- இதனுடன் சேர்த்து, 2025 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 21 ஆம் தேதி ஆனது உலகப் பனிப்பாறைகள் தினமாக கொண்டாடப் படும் என்றும பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஆனது இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் அங்கீகரிக்கப்பட்ட அதன் 80வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- எனவே, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2025 ஆம் ஆண்டினைச் சர்வதேச அமைதி மற்றும் நம்பிக்கை ஆண்டாக (IYPT) அறிவித்துள்ளது.

## போஸ்னியாவின் செவ்டலிங்கா




- செவ்டலிங்கா என்பது போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவில் நடைமுறையில் உள்ள பாரம்பரிய நகர்ப்புறப் பாடலின் ஒரு வடிவமாகும்.
- செவ்டலிங்காத்தின் முக்கியப் பயன்பாடு கதைச் சொல்வது ஆகும்.
- இது இரு பாலினத்தவர் மற்றும் அனைத்துப் பின்னணியில் உள்ள தொழில்முறை மற்றும் ஆரம்ப நிலைக் கலைஞர்களாலும் மேற்கொள்ளப்படும் கலை வடிவமாகும், மேலும், இது மேடை சார்ந்த நாட்டுப்புறக் கதைகளின் முக்கியப் பகுதியாகும்.
- இந்தக் கலையானது பெரும்பாலும் குடும்பங்களுக்குள் பரப்பப்படுகிறது என்பதோடு, குடும்பத்தின் இளைய உறுப்பினர்கள் பெற்றோர்களை மிக நன்கு பின்பற்றுதல் மூலம் அதனைக் கற்றுக் கொண்டு, பின்னர் காலப்போக்கில் தனிப்பட்ட மாறுபாடுகளைச் அதில் சேர்க்கிறார்கள்.
- இது யுனெஸ்கோ அமைப்பின் தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியத்தின் தேசியப் பட்டியலில் தற்போது சேர்க்கப் பட்டுள்ளது.

## 2024 ஆம் ஆண்டில் செல்வ வளம் மிக்க முதல்வர்கள்

- 31 முதல்வர்களின் மொத்த சொத்து மதிப்பு 1,630 கோடி ரூபாயாகும்.

- 931 கோடி ரூபாய்க்கு மேலானச் சொத்துக்களுடன், ஆந்திரப் பிரதேச மாநில முதல்வர் N.சந்திரபாபு நாயுடு இந்தியாவின் பணக்கார முதல்வர் ஆக உள்ளார்.
- இந்தியாவின் தனிநபர் நிகர தேசிய வருமானம் அல்லது NNI ஆனது 2023-2024 ஆம் ஆண்டில் தோராயமாக 1,85,854 ரூபாயாக இருந்தது.
- ஒரு முதலமைச்சரின் சராசரி சுய வருமானம் 13,64,310 ரூபாய் ஆகும் என்ற நிலையில், இது இந்தியாவின் சராசரி தனிநபர் வருமானத்தை விட 7.3 மடங்கு அதிகமாகும்.
- அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் முதல்வர் பேமா காந்து 332 கோடி ரூபாய் என்ற மொத்தச் சொத்து மதிப்புடன் இரண்டாவது பணக்கார முதல்வர் ஆக உள்ளார்.
- கர்நாடகா மாநில முதல்வரான சித்தராமையா 51 கோடி ரூபாய்க்கு மேலானச் சொத்துக்களுடன் இந்தப் பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளார்.
- மேற்கு வங்காள மாநில முதல்வர் மம்தா பானர்ஜி வெறும் 15 லட்ச ரூபாயுடன் மிக ஏழ்மையான முதல்வராக உள்ளார்.
- ஜம்மு-காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா, 55 லட்சம் ரூபாய் சொத்துக்களுடன், இந்தப் பட்டியலில் இரண்டாவது ஏழ்மையான முதல்வர் ஆகவும், பினராயி விஜயன் 1.18 கோடி ரூபாயுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளார்.
- 13 (42%) முதலமைச்சர்கள் தங்கள் மீது குற்றவியல் வழக்குகள் பதிவாகியுள்ளதாக அறிவித்துள்ளனர் என்ற நிலையில் அதில் 10 (32%) பேர் தங்கள் மீது மிக கடுமையான குற்றவியல் வழக்குகள் உள்ளதாக அறிவித்துள்ளனர்.
- 31 முதல்வர்களில் மேற்கு வங்காளத்தின் மம்தா பானர்ஜி மற்றும் டெல்லியின் அதிஷி ஆகிய இருவர் மட்டுமே பெண்கள் ஆவர்.
- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 8.8 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துடன் 14வது இடத்தினைப் பிடித்துள்ளார்.
- IPC விதிகளின் கீழான 11 வழக்குகளுடன் அவருக்கு எதிராக உள்ள அதிகபட்சமாக 47 வழக்குகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.



**FACES ON THE LIST**

| Chief ministers | State | Assets (₹cr) |
|---|---|---|
| **WITH HIGHEST ASSETS** | | |
| N Chandrababu Naidu | Andhra Pradesh | 931.83 |
| Pema Khandu | Arunachal Pradesh | 332.56 |
| Siddaramaiah | Karnataka | 51.93 |
| Neiphiu Rio | Nagaland | 46.95 |
| Mohan Yadav | Madhya Pradesh | 42.04 |
| **WITH LOWEST ASSETS** | | |
| Mamata Banerjee | West Bengal | 0.15 |
| Omar Abdullah | Jammu and Kashmir | 0.55 |
| Pinarayi Vijayan | Kerala | 1.18 |
| Atishi Marlena | Delhi | 1.41 |
| Bhajan Lal Sharma | Rajasthan | 1.46 |
| **TOTAL ASSETS OF 31 CMs** | **₹1,630 CR** | |

Source: ADR's analysis of current CMs of 28 states and three UTs

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★